



தகவல் தொழில் நுட்பத்துறையின் அரசு முதன்மைச் செயலாளரும், கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு. டிகே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து, அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் பணி ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (08.11.2016) நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கு.தர்மராஜன் இ.கா.ப., மாவட்ட வன அலுவலர் திரு. விஸ்விமிஜீ விஸ்வநாதன் இ.வ.ப., ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 783/2016 நாள்: 08.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் பணி ஆய்வுக்கூட்டம் இன்று (08.11.2016) நடைபெற்றது.**

தகவல் தொழில் நுட்பத்துறையின் அரசு முதன்மைச் செயலாளரும், கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், வடகிழக்கு பருவமழை தொடர்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து, அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் பணி ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (08.11.2016) நடைபெற்றது.

கூட்டத்தில் தகவல் தொழில் நுட்பத்துறையின் அரசு முதன்மைச் செயலாளரும், கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினால் எந்தவொரு உயிர்சேதமும், பொருள் சேதமும் ஏற்படாதவாறு, ஒவ்வொரு துறை அலுவலர்களும் தங்களது பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், பொதுப்பணித்துறை அலுவலர்கள் அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும் பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் வடகிழக்கு பருவமழையின் போது வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலோ அல்லது பேரிடர் மேலாண்மை தொடர்பாக வேறு ஏதேனும் உதவி தேவை ஏற்பட்டாலோ 24 மணி நேரமும் இயங்கும் மாவட்ட அவசர கால உதவி மையத்தில் கட்டணமில்லா தொலைபேசி எண்.1077-இல் தொடர்பு கொண்டு தெரிவிக்கப்படும் தகவல்கள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பதுடன், உயிர்சேதம் ஏற்படுவதை தவிர்க்கப்படும்.

வடகிழக்கு பருவமழையின் போது அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்வதுடன், பேரிடர் காலத்தில் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து துறை வாரியாக ஆய்வு செய்யப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கு.தர்மராஜன் இ.கா.ப., மாவட்ட வன அலுவலர் திரு. விஸ்மிஜீ விஸ்வநாதன் இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ. இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.கெட்ஸி லீமா அமலினி, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார்,

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ. ஜெயக்குமார், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர்கள் திரு. பொ. இராஜேந்திரன் (பொது), திரு. நிஜாமுதீன் (விவசாயம்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் திரு. பி.வி.சரவணன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு. சிவதாஸ், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. டி.சின்னம்மாள், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. சந்திரன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பேச்சியம்மாள், உதவி ஆணையர் (கலால்) திரு. காளிமுத்து, பொதுப்பணித்துறை (நீர்ஆதரவு) செயற்பொறியாளர் பொறி சுப்பிரமணியன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. முத்துக்குமார், துணை இயக்குநர் (தோட்டக்கலை) திரு. அசோக் மேக்ரின், துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லேமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. ரூபர்ட் ஜோதி, வட்டாட்சியர்கள் திரு. எ.வி.மூர்த்தி, திருமதி. ஷீலா, திருமதி. முத்துலெட்சுமி, பேரிடர் தனி வட்டாட்சியர் திரு. கண்ணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் பொது மேலாளர் திரு. திருவம்பலம்பிள்ளை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகர்கோவில்.